DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

Spl.SC.No. 95/2024

PROSECUTION WITNESS No - PW- 4

| | |
|---|---|
| Name : வீரமலை | Caste: |
| Father Name | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of November 2025.

எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

<u>**முதல் விசாரணை :**</u>

1) எனது சொந்தஊர் கே.அம்மாபட்டி கிராமம் ஆகும். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். இங்கு காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பம் எங்கு எப்போது பெறப்பட்டது என்றால் நான் வேறு பணிக்காக காவல்நிலையம் சென்றபோது போலீசார் கேட்டுக்கொண்டதால் அவர்கள் கேட்ட இடத்தில் கையொப்பம் போட்டேன். அது எதற்காக போட்டேன் என்று எனக்கு தெரியாது. மேற்படி பார்வைமகஜரில் உள்ள 1வது சாட்சிகையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு தொடர்பாக எனக்கு வேறு எந்த விவரமும் தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அதில் கடந்த 21.12.2021ம் தேதி காலை 11.00 மணியளவில் நானும் என் நண்பன் மச்சக்காளை என்பவரும் அம்மாபட்டி ரோட்டில் நின்றுகொண்டிருந்தபோது இவ்வழக்கு தொடர்பான சம்பவ இடத்தில் புழுதிபட்டி காவல்ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பட்டாஎண்.2028ல் 271(b)

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.11.04 13:27:57 +0530

என்ற இடத்தில் மாதிரிவரைபடமும் பார்வைமகஜரும் தயாரித்தார்கள் என்றும் அவர்கள் தயாரித்த பார்வைமகஜரில் நானும் எனது நண்பர் மச்சக்காளை என்பவரும் சாட்சியாக கையொப்பம் இட்டோம் என்றும ் தற்போது எதிரி உள்ளூர்காரர் என்பதால் உண்மையை மறைத்து கையெழுத்து காவல்நிலையத்தில் போட்டதாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.11.04 13:28:02 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை